வாடிக்கையாளர்கள்
மற்றும் அனைவருக்கும்
இனிய
பொங்கல் வாழ்த்துக்கள்
உரித்தாகுக.

மற்றும் சகல விதமான
பட்டுப் புடைவைகளுக்கும்

ராசி சில்க்ஸ்
70, 71A, நவீன சந்தை,
(உட்புறம்) யாழ்ப்பாணம்.

பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

மங்கள வைபவங்களுக்கு
ஏற்ப பட்டுப் புடைவைகள்
மற்றும் சகல விதமான
ரெடிமேற் வகைகளுக்கு

RASI

ராசி சில்க்ஸ்

சுடர்:9 திருவள்ளுவர் ஆண்டு 2025 தை 08 வெள்ளிக்கிழமை (21 – 01 – 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 55

# கிழக்கில் உள்ளூராட்சித் தேர்தலை நடத்த நாடாளுமன்றத்தில் எம்.பிக்கள் எதிர்ப்பு

## வேட்பாளரைப் பலவந்தமாக நிறுத்தியதாகக் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜனவரி 21

அரசாங்கம் கிழக்கில் உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவதனை ஆட்சேபித்து எதிரணி எம்.பிக்கள் பலரும் நேற்று நாடாளுமன்றத்தில் குரல்எழுப்பினர்.

கிழக்கில் தேர்தல் நடத்துவது கேலிக் கூத்தானதாகும் என்று ஐக்கிய சோஷலிச முன்னணி எம்.பி, அத்தாவுட செனிவிரத்னா குறிப்பிட்டார்.

கிழக்குத் தேர்தலில் ஆளுங்கட்சி பலரையும் பலவந்தமாக நிறுத்தி உள்ளதாக கூட்டணி எம்.பியான திரு. கே. பிரேமச்சந்திரன் குற்றஞ்சாட்டினார்.

திரு. அத்தாவுட செனிவிரத்னா பேசுகையில் —

கிழக்கில் நடைபெறப் போவது ஒரு தேர்தலா? அது ஒரு கேலிக்கூத்து. வடக்கு - கிழக்கு பிரச்சினைக்குத் தீர்வு காணாமல் அரசு எவ்வாறு அங்கு ஜனாதிபதித் தேர்தலை நடத்தப் போகின்றது. இந்த நாட்டை அழிவுக்குள் கொண்டு செல்லாது எல்லாக் கட்சிகளுடனும் பேச்சு நடத்தி பிரச்சினையை முடிவுக்குக் கொண்டுவாருங்கள் — என்றார்.

யாழ். மாவட்ட பிரதிநிதி திரு. கே. பிரேமச்சந்திரன் நேற்று நாடாளு மன்றத்தில் பேசுகையில் கூறியதாவது:-

கிழக்கு மாணத்தில் தேர்தல் நடத்தும் சூழ்நிலை இல்லை. ஐ.தே. கட்சி அங்கு பலவந்தமாகப் பலரை தேர்தலில் நிறுத்தியுள்ளது. சுயேச்சைக் குழுக்களை இராணுவமும் விசேட அதிரடிப்படையினரும் வற்புறுத்தி தேர்தலில் போட்டியிடச் செய்துள்ளன. — என்றார்.

மக்கள் ஐக்கிய முன்னணியின் தலைவர் திரு. தினேஷ் குணவர்த்தனா கூறியதாவது:-

'எயர் லங்கா' இவ்வாண்டு வெளியிட்டுள்ள தினக்குறிப்பு புத்தகத்தில் இலங்கையின் தலைநகரம் யாழ்ப்பாணம் என்றவிதத்தில் உலகப் படத்தை வெளியிட்டுள்ளது. விடுதலைப் புலிகள் தமது நாணயக் குற்றிகளை வெளியிடும் அளவுக்கு செயற்படுகிறார்கள். இது அரசுக்கு அவமானமாகத் தெரியவில்லையா?

இந்த நாட்டில் இனப் பிரச்சினை இல்லை. பயங்கரவாதப் பிரச்சினையே உண்டு என்று ஜனாதிபதி கூறுகிறார்.

அவ்வாறு அவர் குறிப்பிடும் பயங்கரவாதிகளை பேச்சுவார்த்தைக்கு வருமாறு பிரதமர் ரணில் அழைக்கிறார். அவ்வாறாயின் ஜனாதிபதியின் கருத்தில் பிரதமர் முரண்பாடு கண்டுள்ளாரா என்பதை நாடாளுமன்றத்துக்கு அவர் அறிவிக்க வேண்டும்.

கிழக்கில் வாழும் லட்சக்கணக்கான மக்கள் இடம்பெயர்ந்துள்ள இவ்வேளையில் — அமைதியற்ற நிலை அங்கு நிலவும் நேரத்தில் — நேர்மையற்ற ஒரு தேர்தலை அரசு அங்கு நடத்த முயல்வதை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம். — என்றார்.

## மட்டக்களப்பு பகுதியில் மனித உரிமை மீறல்கள்

### நாடாளுமன்றத்தில் குற்றச்சாட்டு

கிழக்கில் மனித உரிமை மீறல்கள் இல்லை என அரசு கூறிவந்தாலும் கடந்த டிசெம்பரில் பல மனித உரிமை மீறல் சம்பவங்கள் மட்டக்களப்பில் இடம் பெற்றுள்ளன.

மட்டக்களப்பு மாவட்ட தமிழர் விடுதலைக் கூட்டணிப் பிரதிநிதி திரு. ஜோஸப் பரராஜசிங்கம் நேற்று நாடாளுமன்றத்தில் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

ஒருவரைக் கைது செய்யும் போது ஒழுங்கு விதிகள் கடைப்பிடிக்கப்பட வேண்டும். இவை மட்டக்களப்பு பகுதிகளில் மீறப்படுகின்றன. எவராவது கைது செய்யப்பட்டது பற்றி நாம் விசாரித்தால் பாதுகாப்புப் படையினர் அதற்கு சரியான விளக்கம் அளிப்பதில்லை. இது நியாயமான செயலாகாது.

யாழ்ப்பாண பகுதிகளில் மா, சீனி என்பவற்றுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுகின்றது. அந்தப் பகுதி மக்களைப் பட்டினிபோடாதீர்கள்.

இப்படி அவர் மேலும் கூறினார். (இ-5)

### முஸ்லிம் ஒருவரின் வீட்டிலிருந்து

## வாழைச்சேனையில் ஆயுதங்கள் மீட்பு

வழைச்சேனை பகுதியில் முஸ்லிம் ஒருவரின் வீட்டிலிருந்து ஏராளமான ஆயுதங்களை பொலீஸார் கைப்பற்றினர். துப்பாக்கிரவைகள், குண்டுகள், வோக்கிடோக்கிகள், பராகுண்டுகள் என்பனவற்றுடன், பொலீஸாரின் சின்னங்களும் கைப்பற்றப் பட்டன என்றும்—

வீட்டைச்சுற்றி இவை புதைத்து வைக்கப்பட்டிருந்தன என்றும் தெரிவிக்கப்படுகிறது. (இ-9)

## புலிகளிடம் ஆயுதம் உள்ளவரை அவசரகாலச் சட்டம் இருக்குமாம்

### நாடாளுமன்றில் அமைச்சர் விமல்

கொழும்பு, ஜன. 21

விடுதலைப்புலிகள் ஆயுதங்களைக்கைவிட்டு அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தைகளை நடத்த முன்வரும் வரை அவசரகாலச் சட்டத்தை நீடிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

அமைச்சர் விமல் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தில் அவசரகாலச் சட்ட நீடிப்புப்பிரேரணையைச் சமர்ப்பித்துப் பேசுகையில் முன்கண்டவாறு தெரிவித்தார்.

வடக்கு-கிழக்கில் தீவிரவாதச் செயல்கள் ஏற்பட்டுள்ளதால் அவசரகாலச் சட்டத்தை நீடிக்கவேண்டி ஏற்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

விடுதலைப்புலிகளின் வன்செயல்களால் நாட்டின் ஏனைய பகுதிகளும் அச்சுறுத்தலை எதிர்நோக்கியுள்ளன. அவசரகாலச் சட்டநீடிப்புக்கு இதுவும் ஒரு காரணமாகும் என்றும் அவர் கூறினார்.

புத்திக குருகுலரத்னா (ஐதேக) பேசுகையில் வடக்கு கிழக்குக்குஅனுப்பப்படும்படையினருக்கு ஒழுங்கான பயிற்சி அளிக்கப்படவேண்டும் என்று சொன்னார்.

வடக்கு கிழக்கு பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்கு எடுக்கப்பட்ட முயற்சிகள் தோல்வி அடைந்துவிட்டன என்று சுரேஷ் பிரேமச்சந்திரன் (ஈபிஆர்எல்எப்) தெரிவித்தார். (இ-எ)

### முச்சந்தி முரளி



அப்ப அவசரகாலச் சட்டத்தை எடுக்கிற நோக்கம் அரசுக்கு இல்லை போல...!

### கல்விக்கல்லூரி அனுமதி பரீட்சை

கல்விக் கல்லூரிக்கான அனுமதிப் பரீட்சை எதிர்வரும் 29 ஆம், 30 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது. யாழ். மாவட்டத்தில் இருந்து இந்தப் பரீட்சைக்கு விண்ணப்பித்தவர்களின் அனுமதி அட்டைகள் நேற்று இங்கு வந்து சேர்ந்தன. (இ-5)

### றம்பாவை குண்டு வெடிப்பு

## வீதியில் சடலங்கள் வீசப்பட்டுக் கிடந்தன

கொழும்பு, ஜன. 21

றம்பாவையில் குண்டு வெடித் தாக்குதலுக்குள்ளான பஸ் குண்டு வெடித்த தாக்கத்தில் முன்னுக்கு இழுத்துச் செல்லப்பட்டு அருகில் இருந்த படைமுகாமின் இரும்புக் கதவையும் முறித்துத் தள்ளிய பின்னரே நின்றது. உயிரிழந்தவர்களின் சடலங்கள் வீதியின் இருமருங்கிலும் வீசப்பட்டு கிடந்தன.

சம்பவத்தை நேரிற் கண்டவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்ததாக 'லங்காதீப' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது:

சம்பந்தப்பட்ட பஸ்ஸில் வைக்கப்பட்ட குண்டு அனுரதபுரம் நகரில் வைத்து வெடிப்பதற்காகத் திட்டமிடப்பட்டிருந்தது என்று பாதுகாப்பு வட்டாரங்கள் நம்புகின்றன.

ஆயினும், பஸ்ஸின் பயணத்தில் ஏற்பட்ட தாமதம் காரணமாகவே அக்குண்டு இடைவழியில் வெடித்தது என்றும் பாதுகாப்புத்துறைப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

உயிர்தப்பிய பஸ் சாரதியிடம் இருந்து சம்பவம் குறித்து முக்கிய தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும் என்று நம்பப்படுகிறது.

சம்பந்தப்பட்ட பஸ், குண்டுவெடிப்பதற்கு முன்னர் அரசமரச் சந்தியிலும், மதவாச்சியிலும் உள்ள படைக் காவலரண்களில் சோதனைக்கு உட்படுத்தப்படவில்லை என்று அச்சம்பவத்தில் காயமடைந்த பதவியா பிரதேச சபை உறுப்பினரான அதிகாரி ரணசிங்கா அனுராதபுரம் ஆஸ்பத்திரியில் வைத்துத் தெரிவித்தார். (இ-6)

## புலன் விசாரணை ஆரம்பம்

கொழும்பு, ஜன. 21

றம்பாவை பஸ் குண்டு வெடிப்புச் சம்பவம் குறித்து புலன் விசாரணை ஆரம்பமாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை — அச்சம்பவத்தில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 12 ஆக அதிகரித்துள்ளது. (இ-6)

## பூம்புகார் பகுதியில் ஹெலி வேட்டு

யாழ்ப்பாணம், ஜன 21

அரியாலை கிழக்கு பூம்புகார் பகுதியை அண்டிய கடற் பிரதேசத்தில் நேற்று முன்தினம் இரவும், நேற்று மாலையும் ஹெலி ஒன்று துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டது.

நேற்று முன்தினம் இரவு அப்பகுதிக்கு வந்த ஹெலி ஒன்று பரா வெளிச்சக் குண்டு

(4 ஆம் பக்கம் பார்க்க)

## பலாலி, ஆனையிறவு, பூநகரி முகாம்களுக்கு ஜெரி விஜயம்

கொழும்பு, ஜன. 21

இராணுவத் தளபதி ஜெரி டி சில்வா சமீபத்தில் பலாலி, ஆனையிறவு, பூநகரி இராணுவ முகாம்களுக்கு விஜயம் செய்தார்.

வடபகுதி சிரேஷ்ட இராணுவ அதிகாரிகளும் இவருடன் வந்திருந்தனர்.

தளபதி ஜெரி டி சில்வா படையினர் மத்தியில் உரை நிகழ்த்துகையில், பயங்கரவாதத்தை முற்றாக அழித்து நாட்டில் மீண்டும் சமாதானத்தை ஏற்படுத்துவார்கள் என்பதில் படையினர் மீது மக்கள் நம்பிக்கை வைத்துள்ளனர் என்று தெரிவித்தார்.

அவர் மேலும் உரை நிகழ்த்துகையில், படையினரினதும் அதிகாரிகளினதும் நலனுக்காக பல புதிய நடவடிக்கைகள் எடுக்கப்பட உள்ளன என்று கூறினார்.

இராணுவ அதிகாரிகளும் படைவீரர்களும் யுத்த முனைகளில் நிறைய அனுபவங்களைப் பெற்றுள்ளனர் என்றும் அவர் கூறினார். (இ-9)

## யாழ். ஜீ. சீ. ஈ. சாதாரணதர பெறுபேறு தாமதமடையும்

### விடைத்தாள் திருத்தும் வேலை ஆரம்பமாகவில்லை

கடந்த டிசெம்பரில் நடைபெற்ற ஜி. சி. ஈ. சாதாரணதரப் பரீட்சையில் தோற்றிய யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த பரீட்சார்த்திகளின் பெறுபேறுகள் தாமதமாகவே வெளியிடப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மேற்படி பரீட்சையில் தோற்றிய யாழ். மாவட்ட பரீட்சார்த்திகளின் விடைத்தாள்களை மதிப்பிடும் வேலைகள் இன்னமும் ஆரம்பிக்கப்படாததே இதற்குக் காரணம்.

இந்தப் பரீட்சையில் தோற்றிய ஏனைய மாவட்டங்களைச் சேர்ந்த பரீட்சார்த்திகளின் விடைத்தாள்களை மதிப்பிடும் வேலைகள் பூர்த்தியடைந்துள்ளன என்றும்—

ஆனால் யாழ்ப்பாணத்தில் இருந்து விடைத்தாள்களை கப்பல் மூலம் எடுத்துச் செல்வதில் ஏற்பட்ட காலதாமதம் காரணமாக யாழ். மாவட்ட விடைத்தாள்கள் கொழும்பில் தேங்கிக் கிடப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

யாழ். மாவட்ட விடைத்தாள்களை மதிப்பிடும் வேலைகள் எதிர்வரும் பெப்ரவரி 5 ஆம் திகதியே ஆரம்பிக்கப் படவுள்ளன என்றும்—

இம்முறை விடைத்தாள்கள் கண்டி, மட்டக்களப்பு மாவட்டங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டு அங்கேயே மதிப்பீடு செய்யப்படவுள்ளன என்றும் கொழும்பில் இருந்து திரும்பிய யாழ். கல்வி அலுவலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (இ-5)

## மன்னார் ராணுவ வேலியிலிருந்து படையினர் மேலும் பின்வாங்கினர்

யாழ்ப்பாணம், ஜன. 21

மன்னார், கட்டைக்காடுப் பகுதியில் அமைந்திருந்த இராணுவ வேலியில் 150 யார் நீளமான பகுதியில் இருந்து ஸ்ரீ லங்கா படையினர் வெளியேறிச் சென்றுள்ளதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வெளியேறிய படையினர் அங்குள்ள கட்டடம் ஒன்றில் தங்கியுள்ளனர்.

தற்போது சிறுநாவல்குளம் முதல் வங்காலை வரையான 10 மைல் நீளத்துக்கு உட்பட்ட பகுதியிலேயே இராணுவ வேலி அமைக்கப்பட்டுள்ளது என்றும்—

மன்னார்த்தீவிலும், பெருநிலப்பரப்பின் சிறு பகுதியிலுமேயே தற்பொழுது படையினர் தங்கியுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (இ-5)

## புலிகளுடன் பேச அரசு விரும்புகிறது இதுவே அவர்களுக்கு இறுதிவாய்ப்பு

### நாடாளுமன்றத்தில் பிரதமர்

கொழும்பு, ஜன. 21

விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு அரசாங்கம் விரும்புவதாகவும் —

அதற்கான ஒரு சந்தர்ப்பம் அவர்களுக்கு வழங்கப்பட்டிருப்பதாகவும் —

பிரதமர் திரு. ரணில் விக்கிரமசிங்கா நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

அவசரகாலச் சட்டத்தை நீடிக்கும் பிரேரணை மீதான விவாதத்தை முடித்து வைத்துப் பேசுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

வடக்கு கிழக்குப் பிரச்சினையை தீர்க்க விடுதலைப் புலிகளுக்கு அக்கறையிருப்பின் அதற்கான ஒரு சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருக்கிறது. பேச்சுவார்த்தை நடத்த அரசாங்கம் விரும்புகிறது என்று பிரதமர் சொன்னார்.

அரசமைப்புத் திருத்தம் சம்பந்தமான நாடாளுமன்றத் தெரிவுக் குழுவுக்கு விடுதலைப் புலிகள் தமது யோசனைகளைச் சமர்ப்பித்து பேச்சுக்கள் மூலம் பிரச்சினையைத் தீர்க்க வருமாறு விடுதலைப் புலிகளுக்குத்தாம் விடுத்த அழைப்பு குறித்துப் பிரதமர் சபையில் பிரஸ்தாபித்தார்.

இந்த அழைப்பை ஏற்று பேச்சுக்கள் நடத்த விடுதலைப்புலிகள் விரும்பவில்லையானால், நாட்டின் பாதுகாப்பு மற்றும் சட்டம், ஒழுங்கை உறுதிப்படுத்துவதற்கு தேவையான பொருத்தமான நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்கும் —என்றும் பிரதமர் கூறினார்.

எதிர்க் கட்சித் தரப்பில் விவாதத்தை முடித்து வைத்துப் பேசிய சுதந்திரக் கட்சி எம்.பி. றிச்சர்ட் பதிரான, "வடக்கு கிழக்கு பிரச்சினையைத் தீர்ப்பது தொடர்பான தனது கொள்கையை அரசாங்கம் தெளிவாகத் தெரிவிக்க வேண்டும்" —என்று கேட்டுக் கொண்டார்.

அவசரகாலச்சட்ட நீடிப்புப் பிரேரணை 62 பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது. (அ-எ)

## படையினரின் வெற்றிமூலமே பிரச்சினையை தீர்க்கலாம்

### சுதந்திரக்கட்சி எம். பி. கூறுகிறார்

கொழும்பு, ஜன. 21

பிரபாகரனுக்கு எத்தனையோ சமாதான அழைப்புகள் அரசினால் விடுக்கப்பட்டுள்ளன. அதனை அவர் நிராகரித்தே வந்துள்ளார். இனிமேலும் அரசு விடுக்கும் சமாதான அழைப்பு அர்த்தமற்றது. பாதுகாப்புப் படையினரை வெற்றி கொள்ளச் செய்வதே பிரச்சினையைத் தீர்ப்பதற்கான ஒரே வழி-

ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி எம். பியான, கே. பி. ரத்தினாயக்கா நாடாளுமன்றத்தில் நேற்றுப் பேசுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

பாவித்த நல்ல நிலையிலுள்ள கடைக்குரிய நிலை, கதவு உயரம் 6 அடி, நீளம் 10 அடி, நிராந்து நீளம் 10 அடி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: முகாமையாளர், அரசடி விநாயகர் ஆலயம், மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (28993)

Hy – Line Brown பேட்டுக் குஞ்சுகள் உடன் பெற்றுக் கொள்ளலாம். நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (29015)

5 வயது அல்சேஷன் ஆண் நாய், 1 வயது பொமனேரியன் பெண் நாய். நல்ல பழக்கமுடையவை. வான் கோழிச் சேவல்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு: சாயி மெடிக்கல்ஸ், திருநெல்வேலி. (29019)

## SPOKEN ENGLISH

Spoken English With Grammar by Mr. M. A. Hari B. A. Dip – in Eng. புதிய பிரிவு Sat, Sun. 11 a m. விவரங்களுக்கு Personal New Science Centre, Jaffna. (சி-6997)

## தேவை

இறைச்சிக் கோழிகள் தேவை. உடன் தொடர்பு: நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (29014)

## இலவச திருமண சேவை

28 வயது, பூராடம் செவ்வாயற்ற கனடா மணமகனுக்கு பெண் அனுப்பக்கூடியவர்கள் / அங்கிருப்பவர்கள் விண்ணப்பிக்கவும். மணமக்களுக்கு வாழ்வு பிறக்க நாடுங்கள்: து. விமலா, இலவச திருமண சேவை, யாழ். நாச்சிமார் கோவிலடி. (28985)

## மணமகன் தேவை

இந்து மதம், பூரட்டாதி நட்சத்திரம் செவ்வாய்க்குற்றமற்ற, படித்த, 24 வயதுடைய பெண்ணுக்கு மணமகன் தேவை. தொடர்பு: G. V. Kanesalinkam, C/o Paramanatha, Uyarappulam, Anaikoddai. (28977)

## கண்டெடுக்கப்பட்டது

பெண்கள் அணியும் கைக்கடிகாரம் கண்டெடுக்கப்பட்டது. விவரங்களுடன் தொடர்பு கொள்ளவும்: க. சுகுமார் இல 9, நக்கா றோட், யாழ்ப்பாணம். (29006)

## கோழிகளுக்கு நோய் தடுப்பூசி

வட்டுக்கோட்டை, ஜன 21

வட்டுக்கோட்டை மிருக வைத்தியசாலையில் நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு கோழிகளுக்கு நோய்த் தடுப்பூசி போடப்பட உள்ளது. (ஈ-161)

## அதிபர்களுக்கான கூட்டம்

யாழ்ப்பாணம், ஜன 21

தெல்லிப்பளை சண்டிலிப்பாய் கல்விக் கோட்டங்களைச் சேர்ந்த ஆண்டு 11 வகுப்புக்களைக் கொண்ட பாடசாலைகளின் அதிபர்களுக்கான கூட்டம் இன்று வெள்ளி பிற்பகல் 3 மணிக்கு மானிப்பாய் இந்துக் கல்லூரியில் நடைபெறும். (த-க)

## தெருக்கூத்து

யாழ் மாவட்டத்தில் நடத்தப்படவுள்ள 3 ஆவது வதிவிட வேளாண்மைப் போட்டியில் கூடுதலானவர்களை பங்கு கொள்ளச் செய்யும் நோக்கோடு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

தற்போது இதனை வலுவடையச் செய்ய வைக்கும் நோக்கோடு வதிவிட வேளாண்மையின் அவசியம் தொடர்பான தெருக்கூத்து ஒன்றினையும் தயாரித்து நடத்தி வருகின்றது.

வலிகாமம் கோட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் உற்பத்தியில் ஈடுபடுமாறு கோரும் இந்த தெருக்கூத்து தற்போது பரவலாக நடத்தப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (க)

---

சீரணி அருள்மிகு

ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் தேவஸ்தானம்

சண்டிலிப்பாய்

## விநாயகர் சித்திரத்தேர்

அம்பாள் ஆலயத்தில் விநாயகர் சித்திரத்தேர் உருவாக இறையருள் கூடி அதற்குரிய வேலைகள் ஆரம்பமாகி உள்ளன.

தேருக்குரிய அன்பளிப்புகள் கொடுக்க விரும்பும் அடியார்கள் நேரடியாக ஆலயக் காரியாலயத்துடன் தொடர்பு கொண்டு அதற்குரிய பற்றுச்சீட்டைப் பெற்றுக் கொள்ளவும்.

இதற்கு எந்தவொரு தனிநபரையும் பணச் சேகரிப்புக்கு நியமிக்கவில்லை என்பதை தேவஸ்தானம் அன்புடன் அறியத்தருகின்றது.

"என் கடன் பணிசெய்து கிடப்பதே"

நன்றி

– தர்மகர்த்தா சபை.

(29006)

---

## கண்ணீர் அஞ்சலி

### திரு ச. சொக்கலிங்கம்

எமது வகுப்பாசிரியர் திரு. சொ. சோதிலிங்கம் அவர்களின் தந்தையார்

திரு ச. சொக்கலிங்கம் அவர்கள்

சிவபதம் அடைந்ததையொட்டி எமது கண்ணீர்ப் பூக்களை காணிக்கையாக்குகின்றோம்.

இவரது பிரிவால் துயருறும் ஆசிரியருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

'13D' உயிரியற் பிரிவு – மாணவர்கள்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.

[29021]

---

பருத்தித்துறை

ஸ்ரீராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம்

சுவாமி விவேகானந்தரின்

## சிக்காகோ நூற்றாண்டு நிகழ்ச்சி

### வினாடி – வினா

**திகதி:** 04–02–1994

**நேரம்:** காலை 10. 30

**தகுதி:** கல்விப் பொதுத்தராதரச் சாதாரண / உயர் வகுப்பு மாணவர்களுக்கு மட்டும் (கல்லூரியில் பயிலுபவர்கள்)
ஒவ்வொரு கல்லூரியிலும் ஒரு பிரதிநிதியை மாத்திரம் அனுப்ப வேண்டும்.

**விடயம்:** இந்து சமயம், அன்னை ஸ்ரீ சாரதாதேவி, ஸ்ரீ ராமகிருஷ்ண விவேகானந்தரைப் பற்றிய சிந்தனைகள், பொதுவான சமய அறிவு, சைவசமயக் குரவர் நால்வரைப் பற்றிய உயர்கருத்துக்கள்.

31–01–1994க்கு முன் மாணவர் பெயர் விவரம் கல்லூரிகளின் அதிபரால் உறுதிப்படுத்தப்பட்டு கீழ்க்காணும் விலாசத்துக்கு அனுப்புதல் வேண்டும்.

செயலாளர்,

ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம்

பருத்தித்துறை

※ முக்கிய குறிப்பு:

04–02–1994 சுவாமி விவேகானந்தரின் சிந்தனைகள் என்ற பொருள் பற்றி சேவாச்சிரமத்தில் காலை 9 மணிக்கு ஒரு கருத்தரங்கு நடைபெற அன்னை திருவருள் பாலித்துள்ளார். கல்லூரியில் பயிலும் உயர்தர வகுப்பு மாணவர்கள் பங்குபற்றலாம்.

[சி-6994]

---

## யாழ்ப்பாணக் கல்லூரி பட்டதாரிப் பிரிவு

JAFFNA COLLEGE 1823 1872 CEYLON

1994/1995 கல்வி ஆண்டுக்கான போதனைப் பகுதிகளுக்கு

**Ist SCIENCE (BIO – SCIENCE) [B. Sc.]**

விரிவுரைகள் 22 – 01 – 1994 சனி காலை 9-00 மணிக்கு ஆரம்பமாகும். பதிவு செய்தோரும் பதிவு செய்ய விரும்புவோரும் தவறாது சமுகமளிக்கவும்.

**Ist SCIENCE (MATHS) B. Sc.**

விரிவுரைகள் ஆரம்பமாகி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. சேர விரும்புவோர் கீழ்வரும் முகவரிக்கு சமுகமளிக்கவும்.

விபரங்களுக்கு:

**யாழ்ப்பாணக் கல்லூரி**

பட்டதாரிப் பிரிவு

இல 464 ஆஸ்பத்திரி வீதி

யாழ்ப்பாணம்

[சி-7086]

---

## L I வகுப்புக்கள் ஆரம்பம்

பட்டயக் கணக்காளர் Licentiate. I வகுப்புக்கள் 22 01 94இல் ஆரம்பமாகின்றன.

தொடர்பு:-

இல. 140 பலாலி வீதி,

திருநெல்வேலி

(29027)

---

## கண்ணீர் அஞ்சலி

### அமரர் எஸ். சொக்கலிங்கம்

எமது புதிய விஞ்ஞானக் கல்வி நிலையத்தில் கல்வி போதிக்கும் பௌதிகவியல் ஆசிரியர் திரு. எஸ். சோதிலிங்கம் அவர்களின் அன்புத் தந்தை எஸ். சொக்கலிங்கம் (ஏழாலை) அவர்கள் 20-01-1994 வியாழன் அமரரானார்.

அவருக்கு எமது கல்வி நிறுவனத்தின் சார்பில் இதய அஞ்சலிகளைச் செலுத்துகிறோம். அன்னாரின் பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எங்கள் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

நிர்வாகி, ஆசிரியர்கள்,

ஊழியர்கள், மாணவர்கள்.

புதிய விஞ்ஞானக் கல்வி நிலையம்

கன்னாதிட்டி,

யாழ்ப்பாணம். (சி/7103)

---

## 2ND MONTH REMEMBRANCE



### MISS HANNA SOBITHAMALAR SINNATHAMBY

BORN: 09 – 11 – 1924

ENTERED REST: 21 – 11 – 1993

So quiet and quickly came her call
Her Sudden death Shocked us all.

Fondly Remembered by your loving:
Sister, Brother, Sisters - in - Law,
Nephews & Nieces.

[29023]

---

## 60ஆம் நாள் இதய அஞ்சலிகள்



### செல்வி தர்மலிங்கம் சனோஷா

(சனோ.)

அன்னையின் மடியில்: 18 – 03 – 1984

ஆண்டவன் அடியில்: 22 – 11 – 1993

பூவாய் மலர்ந்து மணம் பரப்பிய சனோக் குட்டியே! இன்று உதிர்ந்த மலராய் எங்கேயம்மா சென்று விட்டாய்! கனவிலும் நடக்கக் கூடாதது எம் வாழ்வில் நிஜமாக நடந்ததுவோ?

எண்ணி எண்ணிப் பார்க்கின்றோம் உன் உருவம், எம் மனதில் என்றும் நிழலாடுகிறது! உன்னைப் பிரிந்து தவிக்கின்றோம் இன்று நாம்.

அப்பா, அம்மா, தம்பி,

அம்மம்மா சித்தாமார், மாமாமார்,

உற்றார், உறவினர்கள், நண்பர்கள்.

[29018]

---

அளவெட்டி

## கும்பழாவளைப் பிள்ளையார் கோவில் சங்காபிஷேகம்

மேற்படி ஆலயத்தில் நாட்டு நலன் கருதி வருடாந்தம் நடத்தப்படும் சங்காபிஷேகம் இம்முறையும் வழமைபோல் சிறப்பாக எதிர்வரும் 24-01-94 திங்கட்கிழமை நடத்தப்பட உள்ளது. விநாயக அடியார்கள் அதற்கு வேண்டிய பண உதவி, பொருள் உதவி, செய்ய விரும்புவோர் காரியாலயத்தில் கொடுத்து பற்றுச்சீட்டுப் பெற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்ளுகின்றோம்.

முக்கியகுறிப்பு

பொதுச் சபைக் கூட்டம் மாசிமாதம் நடக்க இருப்பதால் உபயகாரர் அனைவரும் அங்கத்துவப் பணம் பத்து ரூபாவைச் செலுத்தி உங்கள் அங்கத்துவத்தை புதிப்பித்துக் கொள்ளும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

இப்படிக்கு

தர்மகர்த்தாக்கள் சபை

(29029)

---

## இதய அஞ்சலி

எமது பௌதிகவியல் ஆசிரியர்

திரு. சொ. சோதிலிங்கம்

அவர்களின் தந்தையார்.

### திரு ச. சொக்கலிங்கம்

அவர்கள் காலமானதையிட்டு மனம் வருந்துகிறோம். அன்னாரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதுடன் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஆண்டு 12 B (கணிதப் பிரிவு)

ஆசிரியர்கள், மாணவர்கள்

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.

(29025)

---

## நன்றி நவில்கிறோம்



அமரர்

### பரமேஸ்வரி சின்னத்துரை

17-12-93இல் இறைபதம் அடைந்த எமது குடும்பத்தலைவி திருமதி பரமேஸ்வரி சின்னத்துரை அவர்களின் மரணச் செய்தி கேட்டு எமக்கு பலவழிகளிலும் ஆறுதல் கூறியோர் மற்றும் வழிகளில் உதவி புரிந்தோர் அன்னாரின், ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், ஈமக்கிரியைகளிலும் கலந்து கொண்டு உதவிகள் புரிந்த உற்றார், உறவினர், அனைவருக்கும் அத்துடன் (20-01-94) அன்று நடைபெற்ற அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகளின் போது சிரமம் பாராது உதவி புரிந்த அனைவருக்கும் எமது உளம் கனிந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம்.

பொ. தவமணி

(ராணி)

(மகள்)

இணுவில் கிழக்கு,

வேப்போலை.

(சி/7039)

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு: 02 – 02 – 1920

உதிர்வு: 22 – 12 – 1993

### காசிப்பிள்ளை தாமோதரம்பிள்ளை

(மல்லாகம்)

ஆலம் விழுதுகளாய் இத்தரணியில் நாம் சீருடன் வாழ வழிசமைத்த – பெரியப்பாவே

காலத்தால் உம்பணி முடித்துச்சென்ற உம்மிலை ஞாலம் உள்ளவரை நாம் மறவோம்.

எம் வாழ்வுக்கு ஒளிவிளக்காய் நின்று அன்புடன் வழிகாட்டி, பண்புடன் வாழவைத்த தெய்வமே! உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவன் திருவருளைப் பிரார்த்திக்கின்றேன்.

ந. நவக்குமாரன்,

(பெறாமகன்)

(Commercial Bank, Jaffna)

உசன்,

மிருசுவில்.

(6916)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
292/2, நாவலர் வீதி
யாழ்ப்பாணம்.

## உள்நாட்டு அந்நியர்கள்!

வலிகாமம் மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் மட்டும் 125 ஹெக்டர் நெல் வயல்கள் முற்றாக அழிந்துள்ளன. இதனால் அப்பகுதியில் எதிர்பார்க்கப்பட்ட நெல் விளைச்சலில் 25 சதவீதம் வீழ்ச்சி காணப்போவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வருடம் மாரியில் கனத்த மழை பெய்தது அதிக மழை பெய்தபோ இலும் நெற் செய்கை மிகப் பெரிதாகப் பாதிக்கப்படமாட்டாது என்றே விவசாயிகள் பலரும் நம்பிக் கொண்டிருந்தார்கள். ஆனாலும் பல இடங்களில் விளைச்சல் பாதிக்கப்பட்டிருக்கிறது. நெல் வயல்கள் வெள்ளத்தினால் அழியுண்டிருக்கின்றன.

இப்போதைய சூழ்நிலையில் விவசாயம் என்பது பல சிரமங்கள், கஷ்டங்கள், பற்றாக்குறைகளை எதிர்நோக்கும் தொழிலாகி விட்டது. பருவத்தே பயிர் செய்து உரிய பயனைப் பெறுவதற்கு பல தடங்கல்கள் உள்ளன.

அரசாங்கம் தமிழர்கள் மீது பொருளாதாரத் தடையை விதித்து அவர்களை நெருக்கி, வருத்தி வருகிறது. அதற்கு மேலதிகமாக வடக்கின் உற்பத்தி மற்றும் தொழில் வாய்ப்புகளை நசுக்கிக் கொண்டிருக்கிறது. அதனால் தமிழர்களின் பொருளாதாரம் பெரிதும் நலிந்து விட்டது. தமிழர்களை அமுத்தி நெருக்கி, நசுக்கி, அழிக்கும் தனது நோக்கை அடைவதற்கு அரசு பலவிதமான மறைமுக உத்திகளையும், தந்திரோபாயங்களையும் கையாள்கிறது.

இவற்றுக்கு எதிராக நீச்சலடித்து, பெரும் கஷ்டங்களை எதிர்கொண்டே இந்த மண்ணில் விவசாயமும் மற்றும் உற்பத்தித் துறைகளும் நடக்கின்றன. இதனை உணராத சில அதிகாரிகள் இன்னமும் அரசாங்க 'ஊழியர்'களாகவே நடந்து கொள்கிறார்கள். தாம் பணிபுரிவது இந்த மண்ணில்; இந்த மண்ணுக்காக; இந்த மண்ணின் மக்களுக்காக என்பதை மறந்து விடுகிறார்கள்.

நாளாந்தம் கையொப்பம் இட்டால் மாதாந்தம் சம்பளம் கிடைக்கிறது. நமக்கென்ன; என்ற மனப்போக்கு அந்தச் சில அதிகாரிகளிடம் இருக்கவே செய்கிறது. மக்கள் எந்தச் சூழ்நிலையில் வாழ்கிறார்கள் அவர்கள் வாழ்வதற்கு என்ன செய்யவேண்டும், அதற்கான தங்கள் பணி என்ன என்பதனை உணர்பவர்களாக இல்லை.

அத்தகைய ஒரு சிலர் இருப்பதாலேயே வலிமேற்கில் 125 ஹெக்டர் நெல்வயல் முற்றாக அழிய நேர்ந்திருக்கிறது. பெருமழையினால் உண்டான வெள்ளத்தின் பாதிப்பைத் தவிர்ப்பதற்கு தங்கள் பணி பிரதானமானது என்பதனை அந்த அரச ஊழியர்கள் உணரவில்லை. அதனாலேயே அவர்கள் உரிய நேரத்தில் கல்லுண்டாய் பாலத்தில் உள்ள கதவுகளைத் திறந்து வயல்களில் நிரம்பிய வெள்ளத்தை வடியச் செய்யவில்லை.

இவர்களைப் போன்ற அரச உத்தியோகத்தர்கள், அதிகாரிகள் சமூகத்துக்குப் பயனற்றவர்கள். தேச வளர்ச்சியில், மக்கள் நலனில் அக்கறை இல்லாதவர்கள் எவராயினும் அவர்கள் அகற்றப்பட வேண்டியவர்கள். சுயநலத்துடன், வருமானம் பெறும் எண்ணத்துடன் செயலாற்றுவோர், மக்கள் சேவைக்குரிய பதவிகளை வகிப்பதற்குத் தகுதியற்றவர்கள்.

தனது மக்கள் தனது தேசம் என்ற உணர்வில்லாத எவரும் இந்த மண்ணுக்கு அந்நியர்களாகக் கருதப்பட வேண்டியவர்களே.

இந்த உள்நாட்டு அந்நியர்கள் தாமாகத் திருந்தினால் நல்லது. இல்லையேல் திருத்தப்பட வேண்டும். நெற்பயிருக்குள் வளரும் களையாக உள்நாட்டு அந்நியர்கள் சமூகத்தின் பல மட்டங்களிலும், பல துறைகளிலும் வளர்ந்திருக்கிறார்கள். அவர்கள் களைகள் என்பதால் எல்லா வகைகளாலும் களையப்பட வேண்டியவர்களே. அவர்களைக் களைந்து எறியாவிட்டால் களைகள் பல்கிப் பெருகி, நெல்லை மூடி அழித்துவிடும். அதாவது சமூக வளர்ச்சி என்ற விளைச்சல் அழிந்து போகும் அபாயம் உண்டு.

## விதை நெல் சேகரிக்கும்படி விவசாயிகளுக்கு அறிவுறுத்து

யாழ்ப்பாணம், ஜன. 21

1993/94 கால போகத்தில் விவசாயத் திணைக்களத்தில் இருந்து தருவிக்கப்பட்ட நெல் வினங்களை விதைத்துள்ள விவசாயிகள், தங்கள் வயல்களிலுள்ள கலப்பு இனங்களை இனங்கண்டு — அவற்றைப் பிடுங்கி அகற்றி, உரிய நேரத்தில் அறுவடை செய்து தனியாகச் சூடடித்து சேகரித்து வைத்து 1994/95 காலபோகச் செய்கைக்கு மற்ற விவசாயிகளுக்கும் வழங்கித் தமது தேவையையும் பூர்த்தி செய்ய வேண்டும் என்று யாழ். மாவட்ட விவசாய உதவி விவசாயப் பணிப்பாளர் திரு. த. சிவலோகநாதன் கோரிக்கை விடுத்துள்ளார்.

1993/94 காலபோகத்தில் பெய்த பெருமழை காரணமாக மாவட்டம் முழுவதும் நெற்பயிர் ஓரளவு நல்ல நிலையில் பயிராக உள்ளதை அவதானிக்க முடிகிறது. அத்துடன் விவசாய திணைக்களத்தில் இருந்து தருவிக்கப்பட்டு விநியோகிக்கப்பட்ட பதிவு செய்யப்பட்ட, அத்தாட்சிப் படுத்தப்பட்ட சிவப்பு அரிசி நெல் இனங்களான எச் 4, பிஜி 350, பிட்டிபிளு 351, ஏரி 353, ஏரி 402 ஆகிய இனங்களும் நல்ல விளைவை தரக்கூடிய நிலையில் இருக்கின்றன.

மேற்குறிப்பிடப்பட்ட வர்க்கங்களை 1994/95 கால போகத்தில் பயிரிட விரும்பும் ஏனைய விவசாயிகள் தத்தம் பகுதி விவசாயப் போதனாசிரியர்களுடன் தொடர்பு கொண்டு விதைநெல் வைத்திருக்கும் விவசாயிகளை அறிந்து கொண்டு தமக்கு தேவையான விதை நெல்லை உடனடியாக வாங்கிச் சேகரித்து வைக்கும்படியும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (அ-162)

## இடம்பெயர்ந்தோர் உணவு முத்திரை

இடம்பெயர்ந்தோருக்கான நிவாரண உலர் உணவு முத்திரைகளை இன்று வெள்ளி முதல் புனர்வாழ்வுக் கிளையில் பெறுமாறு செயலக திட்டப்பணிப்பாளர் திரு. செ. பத்மநாதன் பிரதேச செயலர்களைக் கேட்டுள்ளார்.

கிராம சேவையாளர்கள் மூலம் முத்திரையை உடன் விநியோகிக்க ஏற்பாடு செய்யுமாறும் அவர் கோரியுள்ளார். [த-3]

## சலேசியார் ஆலய நூற்றாண்டு விழா

சங்கானை புனித சலேசியார் ஆலய நூற்றாண்டு விழா எதிர்வரும் 24ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறவுள்ளது. கடந்த 15ஆம் திகதி தொடக்கம் இவ்வாலயத்தில் நவநாள் ஆராதனைகள் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன. எதிர்வரும் 23ஆம் திகதி நற்கருணை ஆராதனையும், 24ஆம் திகதி யாழ். ஆயர் அதிவண. தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை தலைமையில் திருவிழாத் திருப்பலியும் அதனை தொடர்ந்து நூற்றாண்டு விழா நிகழ்ச்சிகளும் நடைபெறவுள்ளன. நூற்றாண்டு விழா மலர் ஒன்றும் வெளியிடப்படவுள்ளது விழா ஒழுங்குகளை பங்குத் தந்தை அருட்திரு பென்ற் அடிகளார் மேற்கொண்டு வருகின்றார்.

## கம்பன் விழாவின் இன்றைய நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், ஜன 21

காரைநகர் கம்பன் கழகத்தின் கம்பன் விழா இன்று வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு ஆரம்பமாகிறது.

பேராசிரியர் அ. சண்முகதாஸ் தலைமையில் நல்லூர் இளங்கலைஞர் மன்ற கலா மண்டபத்தில் நடைபெறும் விழாவில் இன்று இடம் பெறும் நிகழ்ச்சிகள் வருமாறு:

திரு எஸ். சிதம்பரநாதன் குழுவினரின் மங்கள இசையுடன் நிகழ்ச்சிகள் ஆரம்பமாகும். கடவுள் வாழ்த்து, வரவேற்புரை ஆகியவற்றை தொடர்ந்து நல்லை ஆதீன முதல்வர், செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி ஆகியோரின் ஆசியுரைகள் இடம்பெறும். சிறப்புரையை பேராசிரியர் வே. தர்மரட்ணமும், தொடக்க உரையை கலை, பண்பாட்டுக் கழகப் பொதுப் பாளர் திரு புதுவை இரத்தினதுரையும் நிகழ்த்துவர்.

அதனைத் தொடர்ந்து பட்டிமண்டபம் இடம் பெறும். "கம்ப காவியம் காலம் கடந்து நிலைக்க பெரிதும் காரணமாவது" அறச்சிந்தனையே! கவித்துவமே! பக்திச்சார்பே! என்ற தலைப்பில் பட்டிமண்டபம் இடம் பெறும்.

திருவாளர்கள் இரா. செல்வவடிவேல், க. நாகேஸ்வரன் எம். ஏ. இ. சிவநேசன், திரு. ந. கணேசமூர்த்தி, ஆ. திருமுருகன் பி.ஏ., த. சிவகுமாரன், பொன். கணேசமூர்த்தி, மு. க. வேலாயுதபிள்ளை, இ. திருநந்தகுமார் ஆகியோர் பட்டிமண்டபத்தில் கலந்து கொள்வர். அகில இலங்கை கம்பன் கழக அமைப்பாளர் திரு. இ. ஜெயராஜ் நடுவராகக் கலந்து கொள்வார். (த-க)

## கல்வி ஊக்குவிப்பு போட்டி

யாழ்ப்பாணம், ஜன. 21

காரைநகர் வாரிவளவு நல்லியக்கச் சபையின் காரைநகர் மாணவர்களுக்கான 1994 ஜனவரி மாத கல்வி ஊக்குவிப்புப் போட்டி நிகழ்வுகள் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு யாழ் நாவலர் மகாவித்தியாலயத்தில் நடைபெறும்.

### கிழக்கு உள்ளூராட்சித் தேர்தல்;

## பலவந்தமாக ஒப்பமிட்டவர்கள் வேட்புமனுவை ரத்தாக்கலாம்

கொழும்பு, ஜன 21

கிழக்கு மாகாண உள்ளூராட்சி சபைத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளராகப் போட்டியிடுமாறு படை அதிகாரிகள் முன்னால் நிறுத்தப்பட்டு வற்புறுத்தப்பட்டே தம்மிடம் வேட்புமனுக்களில் கையொப்பம் பெறப்பட்டதாகப் பலரும் முறையிட்டிருக்கிறார்கள்

இதுகுறித்து மட்டக்களப்பு மாவட்ட எம். பியான திரு. ஜோசப் பரராஜசிங்கம் ஜனாதிபதிக்கு முறையிட்டுள்ளார்.

இது குறித்து தேர்தல் ஆணையாளரிடம் கேட்ட போது —

வேட்புமனு பத்திரத்தில் பலவந்தம் காரணமாகத் தாம் கையெழுத்திட்டதாக பொலீஸ்நிலையத்தில் முறைப்பாடு செய்வதன் மூலம் வேட்பாளர் ஒருவர் தமது வேட்புமனுவை உடனடியாக ரத்துச் செய்ய முடியும் — என்று தெரிவித்தார்

எப்படியயினும் இது விஷயம் மேல் விசாரணைக்காக பாதுகாப்பு அமைச்சுக்கு அனுப்பப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

சமர்ப்பிக்கப்பட்ட எல்லா வேட்புமனுக்களும் ஏற்கப்பட்டதாகவும் அவர் கூறினார்.

அரச வாகனங்களில் பலவந்தமாக ஏற்றிச் செல்லப்பட்டு சட்டம், ஒழுங்கை நிலைநாட்டும் அதிகாரிகள் முன்னால் நிறுத்தப்பட்டதாகவும் —

அங்கு வைத்து ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர்களாக நியமனப்பத்திரங்களில் கையொப்பமிடும்படி தாங்கள் வற்புறுத்தப்பட்டதாகவும் — வேட்புமனுக்களில் கையெழுத்திட்ட பலர் முறையிட்டிருக்கின்றனர். [அ-எ]

## யுத்தத்திற்கு முகம் கொடுக்க புலிகள் தயாராகின்றனர்

### கனடா பத்திரிகை தகவல்

கொழும்பு ஜன. 21

புதிய வருடத்தில் மிகத் தீவிரமாக யுத்தத்திற்கு முகம் கொடுக்க புலிகள் தயாராகி வருவதாக கனடாவிலிருந்து வெளியாகும் "சக்தி" என்ற பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த வருடத்தில் பெரும் தாக்குதல் ஒன்றை மேற்கொண்டு புலிகள் வசம் உள்ள யாழ்ப்பாணத்தை கைப்பற்றவும் புலிகளை பல மிழக்கச் செய்வதற்கும், அரசு தயாராகி வருகின்ற அதே வேளையில் புலிகளும் இந்த யுத்தத்திற்கு முகம் கொடுக்க தயாராகிவருகின்றனர்.

இதற்கென மேலும் 3 ஆயிரம் பேரை புதிதாக இதுவரை புலிகள் தயார்ப்படுத்தி உள்ளனர் என்றும் — மேலும் ஏராளமானவர்களுக்கு தீவிர பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-9)

### மக்கள் வங்கி

## சுருக்கெழுத்தாளர் பரீட்சை; விவரங்களை வெளியிடுக!

### அரச அதிபருக்கு மகஜர்

யாழ்ப்பாணம், ஜன. 21

யாழ் மாவட்ட மக்கள் வங்கிக் கிளைகளில் தமிழ், ஆங்கில சுருக்கெழுத்தாளர் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பது தொடர்பான பரீட்சைக்கான மேலதிக விவரங்கள் சில வற்றை பத்திரிகைகள் மூலம் வெளியிட வேண்டும்.

பதவிக்கான வெற்றிட எண்ணிக்கை, ஆட்சேர்ப்புப் பரீட்சைக்கு விடையளிக்க வேண்டிய பாடங்கள் பற்றிய விவரங்கள் சுருக்கெழுத்து, தட்டெழுத்து பாடங்களுக்கான பரீட்சை நடைபெறுமாயின் தேவையான குறைந்த பட்ச வேகம் போன்ற விவரங்களை பரீட்சார்த்திகளின் நன்மை கருதி வெளியிட வேண்டும்.

இவ்வாறு வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகம், யாழ். அரசாங்க அதிபருக்கு அனுப்பி வைத்துள்ள மகஜர் ஒன்றில் கோரி உள்ளது.

போக்குவரத்து வசதியற்ற இந்தக் காலத்தில் தட்டச்சு இயந்திரங்களை பரீட்சார்த்திகள் இரவலாக வாங்கி தூர இடங்களுக்கு கொண்டு செல்வது கஷ்டமானதால் தெல்லிப்பழைப் பகுதியில் பரீட்சை நிலையம் ஒன்றை அமைக்க வேண்டும் என்றும் —

சிலர் இருமொழி பதவிகளுக்கும் விண்ணப்பித்துள்ளதால், பரீட்சார்த்திகள் தட்டச்சு இயந்திரத்தை பகிர்ந்து பாவிக்க வசதியாக 5 தொகுதியாக பரீட்சையை நடத்த வேண்டும் என்றும் அந்த மகஜரில் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (க-9)

### மட்டக்களப்பில்

## தொழிலாளரிடம் ஊதியமின்றி வேலை வாங்கும் இராணுவம்

மட்டக்களப்பு மாவட்டத்தில் மருதமனைப் பகுதியில் கட்டடத் தொழிலாளர்களை ஸ்ரீலங்கா இராணுவத்தினர் பிடித்துச்சென்று சம்பளமற்ற வேலை பெறுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு பிடித்துச் செல்லப்படும் கட்டடத் தொழிலாளர்கள் பதுங்கு குழிகள். மலசல கூடங்கள், கட்டடங்கள், பூங்காக்களை இராணுவ முகாம்களில் அமைத்துக் கொடுக்கும் பணிக்கு அமர்த்தப்படுகின்றனர்.

பெரிய நீலாவணை ஸ்ரீலங்கா இராணுவத்தினரே இவர்களைப் பிடித்து சம்பளம் கொடுக்காது வேலை பெறுகின்றனர். இதனால் தம்மால் தொழில் முயற்சிகளில் ஈடுபடமுடியாதுள்ளதாக கட்டடத்தொழிலாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

## ஆயுதக் கொள்வனவும் யுத்தமும் தீர்வல்ல; ஜனநாயகச் சூழலை தோற்றுவிக்க வேண்டும்

பாதுகாப்பு படையினருக்கு போதிய ஆயுதபலம் தற்சமயம் உள்ளது. யாழ்ப்பாணக் கோட்டையை புலிகள் கைப்பற்றி விடாமல் திறமையாக தவிர்த்துக் கொண்டோம். அடுத்து ஆனையிறவு முகாம் புலிகள் வசம் வீழ்ந்து போகாமலும் திறமையாகப் போராடினோம். கிளாலியை தொடர்ந்து தக்க வைத்துக்கொள்ள முடியாவிட்டாலும் அங்கு வெற்றிகரமாக அணிவகுத்துச் சென்றோம். பூநகரி தாக்குதலிலும் அது நமக்கு சாதகமாக அமையாவிட்டாலும் முகாம் முற்றாக புலிகளிடம் வீழ்ந்து விடாமல் காப்பாற்ற முடிந்தது.

ஆகவே நமக்கு போதியளவு ஆயுதபலம் உள்ளது ஆனால் நமக்கு தற்சமயம் வேண்டிய தென்னவென்றால், முதலாவது கைப்பற்றிய பிரதேசமொன்றை எவ்வாறு தொடர்ந்து தக்க வைத்துக் கொள்வது என்பது பற்றிய தந்திரோபாயமும் அதற்கான கட்டுமான ஒழுங்கமைப்பும், இரண்டாவது இராணுவத்தின் அனைத்து பிரிவுகளிலும் திறமை அபிவிருத்தி செய்யப்பட வேண்டும்.

திறமை என்னும் போது தகுதியை அங்கீகரிக்காமல் திறமையை அபிவிருத்தி செய்துவிட முடியாது. பலம் மட்டும் ஒரு தகுதி அல்ல. நிலைமை இப்படி இருக்கும் போது நாட்டை யுத்தப் பாதையில் இட்டுச் சென்றால் கூட ஒரு விடை கிடைத்து விடாது.

### ஜனநாயக அணுகு முறைகள்

இலங்கை ஒரு ஜனநாயக நாடாக இருந்தும் கூட பிரச்சினையை ஜனநாயக வழியில் தீர்ப்பதில் பின்னடைந்து விட்டது. முன்னாள் அமெரிக்க ஜனாதிபதிகளில் ஒருவரான ஐசன்கோவர் முன்னர் இராணுவத்தில் கடமையாற்றியவர். அவர் இராணுவத்தில் பல படிகளைத் தாண்டி உயர் பதவிக்கு வந்தவர். அவருடைய பிரியாவிடைப் பேச்சு யாவரும் ஆச்சரியப்படும்படியாக இருந்தது. அவர் தன்னுடைய பேச்சில், "இராணுவத்தால் கூட நமக்கு தேவையில்லாத பாதிப்புகள் ஏற்பட்டு விடாவண்ணம் எங்களை நாங்களே காத்துக் கொள்ள வேண்டும்" என்றார்.

ஐசன்கோவர் தேச நலனையே கருத்திற்கொண்டிருந்தார். அதனால் அவர் நல்ல தலைவராகக் கணிக்கப்பட்டார். ஜனநாயக சூழ்நிலைகளை தோற்றுவித்து கொரியாவில் நிரந்தர சமாதானம் ஏற்பட வழி சமைத்துக் கொடுத்தவரும் அவரே.

ஆனால் இலங்கை பிரச்சினை விடயத்தில் இதுவரை உருப்படியான எந்தவொரு திட்டமும் வரையப்படவுமில்லை.! தீர்வும் இட்டவில்லை. இத்தனைக்கும் பிரச்சினை தோன்றி இரண்டு தசாப்தங்கள் கடந்து விட்டன. அதனால் எதிர்காலத்தில் இன்னொரு அரசாங்கம் வந்தால் கூட இப்பிரச்சினையை தீர்க்க சிரமப்படும்.

காலஞ்சென்ற [illegible] இரண்டு அருமையான திட்டங்களை அமுல் [illegible] ஒன்று வாகன இலக்கத்தகடு களிலிருந்து 'ஸ்ரீ' அகற்றியது. இரண்டு பாடசாலைகளில் மூன்று மொழிகளும் போதிக்கப்பட வேண்டுமென்று கட்டாயப்படுத்தியது. இந்த இரண்டு யோசனைகளும் புத்திசாலித்தனமானவையும் தூரநோக்குக் கொண்டவையும் ஆகும்.

கடந்த 16 ஆண்டுகாலமாக இலங்கையில் தொடர்ந்தும் ஒரே கட்சியே ஆட்சிசெய்து வருகிறது இந்த 16 ஆண்டு காலத்தில் கல்விமான்களின் ஆதரவு அரசுக்கு கிடைத்திருக்குமாயின் நாட்டு மக்களுக்கு ஜனநாயகப் பெறுமானங்கள் பற்றி அறிவு புகட்டியிருக்க முடியும். அதன்மூலம் நாட்டில் ஒருமைப்பாடும் மதசார்பின்மையும் ஏற்பட்டிருக்கும். வெறும் வாய்ச்சவடால் அரசியல் என்ற சாபக்கேடு தோன்றியிராது. நாடும் ஜனநாயக வழியில் சென்றிருக்கும்.

## வெற்றி என்பது பொருளாதாரக் கண்ணோட்டத்துக்கு மாறுகிறது

### புதிய சர்வதேச ஒழுங்கு

உலக அரங்கில் கம்யூனிஸத்தின் வீழ்ச்சியும் ஒரு பொருளாதார வல்லரசாக ஜப்பான் வளர்ந்து வருவதனாலும் இராணுவ வெற்றியென்பது தன் முக்கியத்துவத்தை இழந்துள்ளது. உலகவல்லாதிக்கத்துக்கு இரண்டு வல்லரசுகளுக்கிடையே இருந்த போட்டி இப்போது இல்லை. தற்சமயம் புதியதொரு சர்வதேச ஒழுங்கு உருவாகி வருகிறது. இந்தப் புதிய ஒழுங்கின் [illegible] உள்ளது. இராணுவ அதரவு [illegible] டொலருடன் தன்னுடைய ஜப்பானிய யென்னை போட்டிக்கு விட்டுள்ளது. ஜப்பான் இதில் ஜப்பானியயென்னின் கையே ஓங்கி வருகிறது. முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் ஜப்பானுக்கு சென்று பொருளாதார வளர்ச்சியை மட்டுப்படுத்தும் படி கேட்கும் அளவிற்கு ஜப்பானின் வெற்றிவாகை சூடிவிட்டது.

ஜப்பான் சென்ற ஜோர்ஜ் புஷ்ஷிற்கு ஜப்பானிய பிரதமர் விருந்துபசாரம் ஒன்றை அளித்து கௌரவித்தார். அந்த விருந்தின்போது ஜோர்ஜ் புஷ்ஷிற்கு மயக்கம் ஏற்பட்டது. உடனே அவர் ஜப்பானிய பிரதமரின் மடியில் போய் விழுந்தார் இத்தனைக்கும் 40 ஆண்டுகளுக்கு முன்னர் அதாவது இரண்டாம் உலக மகா யுத்தத்தில் தோற்கடிக்கப்பட்ட ஒரு நாடு தான் ஜப்பான்

### வெற்றியின் புதிய அர்த்தம்

எதிர்காலத்தில் பொருளாதார போட்டிதான் யுத்தகளமாக இருக்கும். "வெற்றி" என்பதன் உட்கருத்து இராணுவ வெற்றி என்ற அர்த்தத்திலிருந்து பொருளாதார வெற்றி என்ற அர்த்தத்திற்கு மாறி வருகிறது. எனவே இந்த மாற்றங்களை கருத்திற்கொண்டு நாம் நமது பிரச்சினையின் யதார்த்தத்தை புதிய கண்ணோட்டத்துடன் நோக்க வேண்டும். மாறிவரும் உலகப் பெறுமானங்களின் மத்தியில் நாம் பின் தள்ளப்படாமல் இருக்க வேண்டுமானால் இப்படியொரு புதிய கண்ணோட்டம் நமக்கு இருந்தே ஆகவேண்டும்.

நான்கு தசாப்தங்களுக்கு முன்னர் அமெரிக்காவின் பிரபல்யம் பூச்சியமாகவே இருந்தது. வெளிகுலாவில் அப்போதைய அமெரிக்க ஜனாதிபதி நிக்ஸனின் கார் அடித்து நொறுக்கப்பட்டதை நினைத்துப் பாருங்கள். ஐ. நாவில் கூட சோவியத் யூனியனும் அணிசேரா நாடுகளும் பலம்பெற்றிருந்தன அதனால் அமெரிக்கா தன்னை காப்பாற்றிக் கொள்வதற்காக அடிக்கடி தனது "வீட்டோ" அதிகாரத்தை பயன்படுத்த வேண்டி இருந்தது.

ஐ. நாவின் தலைமைக் காரியாலயத்தை கூட அமெரிக்காவிலிருந்து வேறு இடத்திற்கு மாற்ற வேண்டுமென்ற தீர்மானங்களும் கொண்டு வரப்பட்டன. இதனால் பயந்து போன அமெரிக்கா ஐ. நாவிற்கான தனது நிதிப்பங்களிப்பை நிறுத்தப்போவதாகவும் கூறியது. அமெரிக்காவிற்கு எதுவும் செய்ய முடியாத நிலை இருந்தது.

ஆனால் 40 ஆண்டுகளின் பின்னர் நிலைமை தலைகீழாக மாறியது. அமெரிக்காவே இன்று ஐ. நாவிற்கு தலைமை வகிக்கிறது என்று கூறலாம். அமெரிக்காவை புறந்தள்ளிய மூன்றாம் உலக நாடுகள் அமெரிக்காவை இன்று வரவேற்கின்றன. இப்போது அமெரிக்காவின் பக்கமே காற்று வீசுகிறது. சக்கரம் முழுமையாக ஒரு சுற்று சுற்றிவிட்டது

உலகத்தில் சில சமுதாயங்கள் தங்களை தாங்களே புதுமெருகேற்றிக் கொண்டதற்கு ஏதுவான காரணிகள்தான் என்ன? அதாவது அவை தங்களை புறவயமாகப் பார்த்து தவறுகளை திருத்திக் கொண்டன அதுதான் அந்த காரணி. ஒரு புத்திசாலி எப்போதும் மற்றவர்களுடைய அனுபவங்களிலிருந்து பாடம் படிக்கிறான் நாங்கள் பௌத்தர்களாக இருப்பதனாலும் பௌத்தம் அடக்கத்தைப் பற்றி போதிப்பதாலும் ஒத்திசைவில் எமக்குச் சில இடர்பாடுகள் உள்ளன.

சுருங்கச் சொல்வதாயின், நாம் நமது பலத்தை மட்டும் அதிகரித்தால் போதாது. திறமையையும் அதிகரிக்க வேண்டும். திறமையென்னும் போது ஆயுதங்கள் கொள்வனவு செய்வதில் மட்டும் திறமையிருந்தால் போதாது ஏனைய துறைகளிலும் திறமை வேண்டும் இல்லாவிடில் நாம் மேலும் மேலும் எதிரிக்கு ஆயுதங்களை அன்பளிப்பாக வழங்கிக் கொண்டிருப்போம்.

இந்தப் பிரச்சினைக்கான தீர்வு ஆயுதங்கள் கொள்வனவு செய்வதும் நாட்டை யுத்தப்பாதையில் இட்டுச் செல்வதும் அல்ல. ஆனால் நாம் ஏற்கனவே நம்மிடமுள்ள மூலவளங்களைப் பயன்படுத்தி நமது புலனாய்வுத் துறையை மேலும் அபிவிருத்தி செய்ய வேண்டும். அத்துடன் ஜனநாயக சூழலையும் தோற்றுவிக்க வேண்டும். அப்போதுதான் இந்தப் பிரச்சினை நமது காலத்தில் தீராவிட்டாலும் இனி வரும் காலத்திலாவது தீரமுடியும்:

பிரிகேடியர் ரஞ்சன் டி. சில்வா

(நன்றி: வீரகேசரி.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## சங்கரப்பிள்ளை பொன்னம்பலம் (மாலைத)

காரைநகர் தங்கோடையைப் பிறப்பிடமாகக் கொண்ட முன்னாள் பதுளை வர்த்தகர் சங்கரப்பிள்ளை பொன்னம்பலம் காரைநகரில் 19-1-94 அன்று காலமானார். அன்னார் காலம்சென்ற ராசம்மா, பாக்கியம் ஆகியோரின் அன்புக் கணவரும் காரைநகர் பத்தர்சேனி விதியைச் சேர்ந்தவரும் தற்போது கொக்குவில் கிழக்கு பொற்பதி வீதியில் வசிப்பவருமான கந்தையா, தவமணி, யோகம்மா, தவலட்சுமி, குணமணி ஆகியோரின் தகப்பனாரும், தவமலர், பரராஜசிங்கம், நடராசா, சுப்பிரமணியம், தெய்பரநாதன் ஆகியோரின் மாமனாரும் ஆவார். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
பொ. கந்தையா
(மகன்)

பொ. கந்தையா,
C/o.R.T சுப்பிரமணியம்,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில். (29028)

## பிரமஸ்ரீ சுவாமிநாதக் குருக்கள் குமாரசாமிக்குருக்கள்

(நீர்வேலி கந்தசாமி கோவில்
சிறுப்பிட்டி அம்மன் கோவில் குருக்கள்)

நீர்வேலியைப் பிறப்பிடமாகக் கொண்ட பிரமஸ்ரீ சுவாமிநாதக்குருக்கள் குமாரசாமிக்குருக்கள் 20-01-94 அன்று காலமானார். இவர் காமாஷியம்மாவின் அன்புக் கணவரும், நித்தியானந்தசர்மா, கௌசல்ஜா, லோகேஸ்வரி, காலஞ்சென்ற லலிதா ஆகியோரின் அன்புத் தந்தையும், சிதம்பரேஸ்வரன், வரதராஜா, சரோஜினி ஆகியோரின் மாமனாரும், மங்களேஸ்வரன், ஜோதிஸ்வரன், மயூரதி, காலஞ்சென்ற மயூரதன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் (20 - 1 - 94) சங்குவேலி சிவஞானப் பிள்ளையார் கோவிலடி இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனத்திற்காக காட்டுப்புலம் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது. இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்;
கு நித்தியானந்தம்
(மகன்)

சங்குவேலி,
மானிப்பாய். (6779)

## ச. சொக்கலிங்கம்

(ஓய்வு பெற்ற அதிபர்)

ச. சொக்கலிங்கம் அவர்கள் 20-01-94 அன்று காலமானார்.

இவர் ஏழாலை மேற்கைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், காலஞ்சென்ற அற்புதத்தின் அன்புக் கணவரும், திரு. அமிர்தலிங்கம் [பிரதேசச் செயலாளர், வவுனியா], திருமதி பத்மாவதி ரத்தினவேல் [ஆசிரியை, யாழ். கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம்], திருமதி கமலாம்பிகை - அண்ணா - ராஜேந்திரம் [ஆசிரியை, ஏழாலை மகாவித்தியாலயம்] திருமதி சரோஜினி தேவி-நாகராஜா [ஆசிரியை, மல்லாகம் மகாவித்தியாலயம்], திரு. சோதிலிங்கம் [பௌதீக ஆசிரியர், யாழ். இந்துக் கல்லூரி] ஆகியோரின் அன்புத் தந்தையாரும், திருமதி தேவமணி [நவநீதம்], அமிர்தலிங்கம் [இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம்-வவுனியா], திரு. நா. இரத்தினவேல் [ஓய்வு பெற்ற கணக்காளர், பொலிஸ் திணைக்களம் - வவுனியா], திரு. அண்ணா - இராஜேந்திரம் [பதிவாளர், மாவட்ட நீதி மன்றம்-வவுனியா], திரு. சு. நாகராஜா [கணக்காளர், இலங்கை மின்சார சபை - வடமாகாணம்], திருமதி கலாதேவி-சோதிலிங்கம் ஆகியோரின் அன்பு மாமனாரும், பார்த்தீபன், சாம்பவி, செந்தூரன், சௌமியா, தேன்மொழி, தமிழினி, எழிலி, வர்மன், குணாகரன், யாதவன், கீதாஞ்சலி ஆகியோரினது பாசமுள்ள பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் வெள்ளிக்கிழமை [1994-01-21] பிற்பகல் ஒரு மணிக்கு ஏழாலை மேற்கிலுள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று ஏழாலை உசத்தியோடை இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சொ. அமிர்தலிங்கம்
[மகன்]
[பிரதேச செயலாளர்-வவுனியா]

தம்புவத்தை வைரவர் கோவில் ஒழுங்கை,
ஏழாலை மேற்கு. [6915]

## மூத்தார் நாச்சன்

(மயிலிட்டி)

மயிலிட்டியைப்பிறப்பிடமாகக் கொண்டவரும், தற்போது சங்கானை பல. நோ. கூ. சங்க சமாச முன்றிலை வசிப்பிடமாகக் கொண்டவருமான காலஞ்சென்ற கதிர்காமு மூத்தாரின் அன்பு மனைவி நாச்சன் (20-1-94) வியாழன் காலை 8.00 மணியளவில் சிவபதம் அடைந்துவிட்டார். இவர் நாகம்மா (கனடா), செல்வபாக்கியம், நவரத்தினம், கந்தசாமி, சிவராஜா (மாமா) ஆகியோரின் அன்புத்தாயாரும், கந்தசாமி (கனடா), சகுந்தலா தேவி, காலஞ்சென்ற மகேஸ்வரி (தெல்லிப்பழை/ அரசினர் வைத்தியசாலை) ஆகியோரின் அன்பு மாமியாரும், இந்திராதேவி (கனடா), ஞானேஸ்வரி, மாலாதேவி, ஸ்ரீபாஸ்கரன் (கனடா), தனபதி (கனடா) ஸ்ரீதரன் (கனடா), உமாதேவி (கனடா), ஸ்ரீகேதரன் (கனடா), ஸ்ரீஜெயந் (கனடா), தர்மினி (கனடா), சிவபரன், சிவகரன், தர்ஷினி, நிரோஜன், சிவராஜகுமார் (கனடா) மகேந்திரராசா (இ. போ. ச. காரைநகர்), ஞானப்பிரகாசம் (பணியாளர், சங்/ப.நோ.கூ.சங்க சமாசம்) ஆகியோரின் பேர்த்தியும், ரோகினி, யாழினி, விஜிந்தன் (தெல்லிப்பழை/மகாஜனாக்கல்லூரி), மேனன் (கந்தரோடை/ கந்தையா த.க. பாடசாலை), சிந்துஜா (கனடா), சிந்தியா (கனடா), சிருஷாந் ஆகியோரின் பூட்டியுமார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் (21-01-94) வெள்ளிக்கிழமையாகிய இன்று காலை 10.00 மணிக்கு சங்கானையில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சங்கானை கரைச்சி மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்
(6780)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிடெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 21-01-1994இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

ஊனமுற்றோர்
புனர்வாழ்வுச் சங்கம்

## 3ஆவது வருடாந்த பொதுக் கூட்டம் - 1994

மேற்படி சங்க வருடாந்தப் பொதுக் கூட்டம் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 4ஆம் திகதி வெள்ளிக்கிழமை (04 - 02 - 1994) பிற்பகல் 3 மணிக்குச் சங்கப் பணிமனையில் நடைபெறும்.

அங்கத்தவர்கள் யாவரும் தவறாது சமுகம் தருமாறு வேண்டிக் கொள்கிறோம்.

சி. உருத்திரலிங்கம்,
செயலாளர்.

16, கொழும்புத்துறை வீதி,
யாழ்ப்பாணம். [29020]

## நல்லூர் பிரதேச வர்த்தகர் சங்கம். அதிர்ஷ்ட லாபச் சீட்டிழுப்பு

19 - 01 - 1994 புதன்கிழமை நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் அதிர்ஷ்டம் பார்க்கப்பட்ட பரிசுச் சீட்டுகளின் அலக்கங்கள்:-

| | | | |
|---|---|---|---|
| முதலாம் பரிசு:- | 13268 | — | ரூபா 25,000/- |
| இரண்டாம் பரிசு:- | 7448 | — | ரூபா 15,000/- |
| மூன்றாம் பரிசு:- | 11403 | — | ரூபா 10,000/- |

ஆறுதல் பரிசுகள்:- தலா ரூபா 1000/-

| | |
|---|---|
| 39238 | 25450 |
| 15758 | 6312 |
| 26067 | 3711 |
| 39434 | 28023 |
| 28303 | 9832 |

இச் சீட்டிழுப்பின்போது இடம் பெற்ற கலை நிகழ்ச்சிகள் மற்றும் ஒலி, ஒளி அமைப்புக்கள் வீடியோ, புகைப்படம், போக்குவரத்து வசதிகள் ஆகியவற்றுக்கான செலவுகளை அன்பளிப்பாக தந்து உதவிய எங்கள் பிரதேச வர்த்தகப் பெருமக்களுக்கும் மற்றும் நிகழ்ச்சிகளை ஒழுங்காக நடத்துவதற்கு ஒத்துழைத்த பொதுமக்களுக்கும் எங்கள் நெஞ்சில் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

சு. தனபாலசிங்கம்
செயலாளர்.
நல்லூர் பிரதேச
வர்த்தகர் சங்கம்.

என். கே. குலசிங்கம்
தலைவர்.
நல்லூர் பிரதேச
வர்த்தகர் சங்கம்.

(சி/7101)

## முக்கிய அறிவித்தல்

### நல்லூர் பிரதேச சபை

நல்லூர் பிரதேச சபையின் நிர்வாக எல்லைக்குள் அமைந்திருக்கும் சகல உணவு விடுதிகள், தேநீர்க் கடைகள், பேக்கரிகள், வியாபார ஸ்தாபனங்கள் ஆகியன 1994 ஆம் ஆண்டுக்குரிய தங்கள் வியாபார உரிமங்களைப் பெறும் பொருட்டு, சம்பந்தப்பட்ட வியாபார விண்ணப்பப் படிவங்களை பிரதேச சபை அலுவலகத்தில், அலுவலக நேரத்தில் பெற்று, விண்ணப்பங்களைப் பூர்த்தி செய்து எதிர்வரும் 31 - 01 - 94க்கு முன்னர் இவ்வலுவலகத்தில் சமர்ப்பிக்கவும், சமர்ப்பிக்கத் தவறும் வியாபார ஸ்தாபனங்களுக்கு 1994 ஆம் ஆண்டுக்கான உரிமம் வழங்குவது என்னால் இரத்துச் செய்யப்பட்டு, வியாபார ஸ்தாபனங்களை மூடி விடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மற்றும் உணவுச்சாலை, விடுதிகள், பேக்கரி சொந்தக்காரர்கள் தங்கள் ஸ்தாபனத்தில் கடமையாற்றும் உணவு பரிமாறும் ஊழியர்கள் சுகாதாரம் சம்பந்தமான வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்தப்படாமல் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டால் சம்பந்தப்பட்ட உணவுச்சாலைகளுக்கு வழங்கப்படும் 1994 ஆம் ஆண்டுக்குரிய உரிமமும் என்னால் வழங்கப்படாது. குறித்த உணவுச் சாலைகள், பேக்கரிகளை மூடி விடுவதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

சகலரையும் இது விடயமாக சபையுடன் ஒத்துழைக்கும் வண்ணம் அன்பாகக் கேட்டுக்கொள்ளுகிறேன். இதுவே இறுதி அறிவித்தலாகும்.

ஆ. மகாலிங்கம்
விசேட ஆணையாளர்,
நல்லூர் பிரதேச சபை.

நல்லூர் பிரதேச சபை,
தலைமையகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம். 19 - 01 - 1994 (சி 7102)

## இன்று

யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரி வர்த்தக மாணவர் மன்றத்தினரின் வணிக ஒளி மலர் வெளியிடும் வணிக தின விழாவும் இன்று வெள்ளி பிற்பகல் 2.30 மணிக்கு கல்லூரி விவேகானந்தா மண்டபத்தில் நடைபெறும்.

★ ★ ★

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியின் பரிசளிப்பு விழா இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கல்லூரியின் 125 ஆவது நினைவு மண்டபத்தில் நடைபெறும். (த)

## ஆலயங்களில்

வட்டு. மேற்கு வீரபத்திர சுவாமி அலங்கார உற்சவத்தின் தேர்த் திருவிழா எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை நடைபெறும். (க-30)

## வர்த்தக சங்க கூட்டம்

யாழ் வர்த்தக சங்கத்தின் விசேஷ பொதுச்சபைக் கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் யாழ் இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறும்.

இதில் விடுதலைப் புலிகளின் அரசியல்துறை உறுப்பினர்களும் கலந்து கொள்ளவுள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-162)

## கருத்தரங்கு

யாழ். மாநகரசபை சுகாதாரப் பகுதியைச் சேர்ந்த சுத்திகரிப்புத் தொழிலாளர்களுக்கான பயிற்சிக் கருத்தரங்கு நாளை சனி காலை 8-30 மணிமுதல் நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயத்தில் நடைபெறும். [இ-5-17]

பூம் புகார்...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
களை வீசியது. தொடர்ந்து துப்பாக்கித் தாக்குதல் நடத்தியது.

நேற்றுப் பிற்பகல் 4.30 மணியளவிலும் ஹெலி ஒன்று அப்பகுதியை பல தடவை சுற்றி வட்டமிட்டு வேட்டுக்களைத் தீர்த்தது.
[இ-5-17-15-16?]

## புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.

**OL**
**ஆண்டு 10, 9**
புதிய பிரிவுகள்
ஆரம்பமாகிவிட்டன.

- ★ கணிதம்: திரு. ல. சதீஸ், திரு. கிருபா
- ★ விஞ்ஞானம்: திரு. தயாநிதி
- ★ தமிழ்: திரு. பிரதீபன்
- ★ ஆங்கிலம்: திரு. கிரிதரன்
- ★ வர்த்தகம்; திரு. சத்தியபாலன்
- ★ சமூகக்கல்வி: திரு. கியூபேட்
- ★ சைவசமயம்: திரு. கிரு

[சி-7037]

உ

ஓம் ஸ்ரீ விராட் விஸ்வப் பிரம்மனே நம

## திருமணத் திருமுகம்

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான ஸ்ரீமுக வருடம் தைத்திங்கள் 10ஆம் நாள் (23-01-1994) ஞாயிற்றுக்கிழமை பி.ப 3 46 முதல் 4 45 வரையுள்ள சுபமுகூர்த்த வேளையில்

வண். வடமேற்கு கேசவிலூரைச் சேர்ந்த
திரு. தா. சுப்பிரமணியம்
அவர்களின்
கனிஷ்ட புத்திரன்
திருநிறை செல்வன்
**குகநாதன்**

நெல்லியடி காளி கோவிலடியை சேர்ந்த
திருமதி மயில்வாகனம் மகேஸ்வரி
அவர்களின்
புத்திரி
திருநிறை செல்வி
**மல்லிகாதேவி**

ஆகியோருக்கு திருவருள் துணை கொண்டு திருமணஞ் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

வரவேற்பாளர்கள்

தா சுப்பிரமணியம் (தந்தையார்),
தா சு.லோகநாதன் (சகோதரர்),
115, வல்லை வீதி,
சங்கானை.
(மணமகன் இல்லம்)

திருமதி மயில்வாகனம்
மகேஸ்வரி (தாயார்),
காளி கோவிலடி,
நெல்லியடி.
(மணமகள் இல்லம்)

இரு வீட்டார் அழைப்பு
(தனிப்பட்ட அழைப்பு இல்லை)

(29030)

உ

யாழ்ப்பாணம் கல்வியங்காடு திருவருள்மிகு
இலங்கை நாயகி மனோன்மணி
அம்பாள் கோவில் புனராவர்த்தனப் பிரதிஷ்டா

## மஹா கும்பாபிஷேக விஞ்ஞாபனம்

காலம்— 23 - 01 - 94 ஞாயிற்றுக்கிழமை காலை 9.45 — 11.15 மணிக்குள் வரும் ரோகிணி நட்சத்திரமும், மீனலக்கினமும் கூடிய சுப வேளையில் மஹா கும்பாபிஷேகம் நடைபெறும்.

முக்கிய குறிப்பு 22 - 01 - 94 சனிக்கிழமை காலை 6.00 மணி முதல் மாலை 4.00 மணி வரையும் பக்தர்கள் எண்ணெய்க் காப்பு சாத்துதல் நடைபெறும்.

நியாய சிரோமணி பிரம்ம ஸ்ரீ.
கி. சுப்பிரமணிய சாஸ்திரிகள்
(நல்லூர்)

சிவாகம ஞானபாஸ்கரன் பிரம்ம ஸ்ரீ.
தா. மகாதேவக் குருக்கள்
(இணுவில்)

ஆகியோரின் தலைமையில் நடைபெறும்.

கும்பாபிஷேக பிரதமகுரு:
பிரம்ம ஸ்ரீ சதாசிவ யோகீஸ்வரக் குருக்கள்
(ராஜாஜி)

மஹா கும்பாபிஷேக உபயம்
பொ. கிருஷ்ணமூர்த்தி சர்மா

இங்ஙனம்,
ஆதீனகர்த்தா பிரம்ம ஸ்ரீ.
சு. பாலசுப்பிரமணி ஐயர்;
(29034)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி சுப்பையா தில்லைமுத்து

குப்பிளானைப் பிறப்பிடமாகவும், 25 - மணல்தறை வீதி. கந்தர்மடத்தில் வசித்தவருமான திருமதி சுப்பையா தில்லைமுத்து 20-01-94 இல் காலமானார்

இவர் முத்துத்தம்பி சுப்பையாவின் அன்பு மனைவியும், முத்தையா (ஓய்வுபெற்ற அதிபர், கொழும்பு), திருமதி இராசம்மா சுவாமிநாதர் (சுவிஸ்), திருமதி மனோன்மணி நடராஜா, திருமதி இரத்தினம் அப்புத்துரை (ஆசிரியை, யாழ் - இந்து மகளிர் கல்லூரி), திருமதி சரஸ்வதி சிற்றம்பலம் (ஓய்வுபெற்ற பிரதம தாதி, கனடா), காலஞ்சென்ற கணேசலிங்கம், திருமதி அம்பிகாவதி மகேந்திரராஜா (கனடா) ஆகியோரின் அன்புத்தாயாரும், திருமதி கண்மணி சின்னத்துரையின் அன்புச்சகோதரியும், திருமதி மலர் தட்சிணாமூர்த்தி, திருமதி மருதமலர் வரதராஜா, இந்துமதி (3 ஆம் வருட விஞ்ஞானபீட மாணவி. யாழ் - பல்கலைக்கழகம்), அன்பழகன் (13 ஆவது அணி - மருத்துவபீட மாணவன், யாழ் பல்கலைக் கழகம்), இளங்குமரன் (A/L மாணவன், யாழ். சென்பற்றிக்ஸ் கல்லூரி) ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21-1-94) எமது கந்தர்மடம் இல்லத்தில் நடைபெற்று நண்பகல் 12 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் கோம்பையன்மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாபேரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
திருமதி இரத்தினம் அப்புத்துரை
(மகள்)

25, மணல்தறை வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம். (29033)

## முருகேசு பொன்னம்பலம் பொன்னையா

(சங்கானை)

சங்கானை அரசினர் வைத்தியசாலைக்கு அருகிலுள்ள ''கணேசவாசம்'' இல்லத்தைச் சேர்ந்த முருகேசு பொன்னம்பலம் பொன்னையா (முன்னாள் போஸ்மாஸ்டர்/போனியோ உத்தியோகத்தர், பிரபல வர்த்தகர் தலவாக்கொல்லை) 20-01-94 அன்று அதிகாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மனோன்மணியின் அன்புக் கணவரும், திருமதி ப. கனகாம்பிகை, திருமதி ற. காந்திமதி, திருமதி ந. சிவகாமியம்மை, திருமதி ந. ஜெகஜோதி, திருமதி சோ. நாகதேவி, திருமதி வி. செல்வமலர், திருமதி க. சிவயோகமலர், பொ. கணேசானந்தமூர்த்தி (Switzerland) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், க. பரமலிங்கம் (இளைப்பாறிய புகையிரதநிலைய அதிபர்) இ. றவுடேந்திரன் (கொழும்பு) ந. நடராசா (வர்த்தகர்), காலஞ்சென்ற மா. நவரத்தினசிங்கம், க. சோமசுந்தரம் (Germany) வே விக்கினேஸ்வரன் (மக்கள்வங்கி), சி. கந்தவேள், திருமதி க. நந்தினி (Switzerland) ஆகியோரின் அன்பு மாமனாரும் ப. ஜெயலிங்கம் (கட்டடக் கலைஞர்), ப. கணேசலிங்கம் (U. K.), திருமதி ஜெ. ஜெயக்குமாரி (U. K ) ப. சிவலிங்கம் (Norway) ற. விக்கினேஸ்வரன் (France), திருமதி கு விக்கினேஸ்வரி (Switzerland) ற. விக்கினராஜ் (Australia), ற. விக்கினரஜனி, கு. புவனேஸ்வரி, ந. பாலேந்திரன், (France), ந. பாலகிருஷ்ணன், ந. பாலேஸ்வரன் (France), ந. பாலேஸ்வரி, இ. அருந்தவமலர் (Germany), ந. ஜெயச்சந்திரன் (U. K.), ந. ஜெயரஞ்சினி, சோ. சுதந்தினி, சோ. சுதந்திரன், சோ. சுதாஜினி, வி. மங்களதாஸ், வி. திலகராஜ், வி. மகின்டா, க. கீதா, க. நிருபா ஆகியோரின் அன்புப் பேரனும், ஜெ. சோபனகுமாரி, ஜெ. நித்திலா, ஜெ. சயந்தினி, கு. தேவகி ஆகியோரின் அன்புப்பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் வெள்ளிக்கிழமை இன்று (21-01-94) பி. ப. 12-30 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் விழாவெளி மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

தகவல்:
வே. விக்கினேஸ்வரன்
(மருமகன்)
(மக்கள் வங்கி, யாழ்ப்பாணம்)

ஆஸ்பத்திரி வீதி,
சங்கானை. (29017)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org